## துறையூர் நகராட்சி

2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் நாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு துறையூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்,

முன்னிலை:முனைவர் ம.முருகராஜ், ஆணையர்
துறையூர்நகராட்சி

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 02.03.2022 | 01 | 1) துறையூர் நகர்மன்றத்திற்கு 19.02.2022 நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மன்ற உறுப்பினர்கள் ஆணையர் முன்னிலையில் பதவி பிரமாணம் செய்து வைத்தல் சம்மந்தமாக<br>2) 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் நாள் புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு ஆணையரால் பதவி பிரமாணம் செய்து வைத்தல் சம்மந்தமாக | தீர்மானஎண்:01 துறையூர் நகராட்சியின் நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் பிப்ரவரி மாதம் 19-ந் தேதி (19.02.2022)ல் தேர்ந் தெடுக்கப்பட்ட 1 முதல் 24 வார்டு நகர மன்ற உறுப்பினர்கள் என் முன்னிலையில் 02.03.2022 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பதவி பிரமாண உறுதி மொழி ஏற்று நகர் மன்ற உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டது. |

| வ.எண் | வார்டு | உறுப்பினர் பெயர் | பதவி |
|---|---|---|---|
| 1 | 1 | திருமதி.த.லலிதா | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 2 | 2 | திருமதி.கி.நித்யா | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 3 | 3 | திரு.ஜெ.கார்த்திகேயன் | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 4 | 4 | திரு.கா.முத்துமாங்கனி | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 5 | 5 | திருமதி.செ.பெரியக்கா | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 6 | 6 | திருமதி.த.ஹேமா | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 7 | 7 | திருமதி.க.கௌதமி | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 8 | 8 | திரு.மு.சுதாகர் | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 9 | 9 | திரு.த.இளையராஜா | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 10 | 10 | திரு.ந.முரளி | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 11 | 11 | திரு.மா.பாஸ்கரன் | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 12 | 12 | திருமதி.ந.திவ்யா | **நகர்மன்ற உறுப்பினர்** |
| 13 | 13 | திரு.ம.பாபு | **நகர்மன்ற உறுப்பினர்** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 14 | 14 | திரு.ச.செந்தில்குமார் | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 15 | 15 | திருமதி.சி.புவனேஸ்வரி | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 16 | 16 | திருமதி.ந.சந்திரா | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 17 | 17 | திருமதி.ம.சுமதி | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 18 | 18 | திருமதி.இ.செல்வராணி | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 19 | 19 | திரு.த.ஜானகிராமன் | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 20 | 20 | திரு.அ.பாலமுருகவேல் | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 21 | 21 | திரு.கா.தீனதயாளன் | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 22 | 22 | திரு.ச.வீரமணிகண்டன் | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 23 | 23 | திருமதி.இ.சரோஜா | **நகர்மன்ற உறுப்பினர்** | |
| | | 24 | 24 | திருமதி.ந.கல்பனா | **நகர்மன்ற உறுப்பினர்** | |

ஒம்/-முனைவர்.ம.முருகராஜ் ஆணையர்,
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்(பொ),
துறையூர் நகராட்சி

# துறையூர் நகராட்சி

2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் துறையூர் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நகர்மன்ற தலைவர் பதவிக்காக மறைமுக தேர்தல் நடத்துதல் தொடர்பாக

முன்னிலை:ஆர்.மணோகரன்
தேர்தல் நடத்தும் அலுவலர்,
துறையூர்நகராட்சி

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| **04.03.2022** | **01** | 2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் துறையூர் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நகர்மன்ற தலைவர் பதவிக்காக மறைமுக தேர்தல் நடத்துதல் தொடர்பாக | **தீர்மான எண்**:02<br>துறையூர்நகராட்சி தலைவர் தேர்ந்தெடுப்ப தற்கான மறைமுக தேர்தல் 04.03.2022 அன்று காலை 9.30 மணியளவில் நகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் கூட்டம் நடத்தப்பட்டது. வருகை தந்த 24 வார்டு உறுப்பினர்கள் அனைவரிடமும் வருகைப் பதிவு விபரம் பெறப்பட்டது. நகர் மன்ற தலைவர் தேர்தலில் போட்டியிட வார்டு எண்: 20 நகர் மன்ற உறுப்பினர் ரு.அ.பாலமுருகவேல் முன்மொழிந்து வார்டு எண்: 21 நகர் மன்ற உறுப்பினர் திரு. கா.தீனதயாளன் வழி மொழிந்து வார்டு எண்: 23 நகர் மன்ற உறுப்பினர் திருமதி இ.சரோஜா அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்தார். அதனை தொடர்ந்து வார்டு எண்.3 நகர் மன்ற உறுப்பினர் திரு.ஜெ.கார்த்திகேயன் முன் மொழிந்தும், வார்டு எண்:8 நகர் மன்ற உறுப்பினர் திரு.மு.சுதாகர் வழிமொழிந்தும், வார்டு எண்:18 நகர் மன்ற உறுப்பினர் ருமதி.இ.செல்வராணி அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தார். காலை 10.00 மணி வரை கால அவகாசம் அளிக்கப்பட்டது. வேறு யாரும் வேட்பு மனு அளிக்கவில்லை. வேட்பு மனு சரிபார்க்கப்பட்டது பெறப்பட்ட இரண்டு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>அதனைத் தொடர்ந்து 2006-ம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை |

| | | | |
|---|---|---|---|
| | | | நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் கண்டுள்ள 102 விதியின்படி வாக்குச்சீட்டுகள் தயாரித்து வார்டு வாரியாக நகர்மன்ற உறுப்பினர்கள் வாக்குப்பெட்டியில்வாக்களிக்க அனுமதிக்க ப்பட்டுவாக்குப்பதிவு நடத்தப்பட்டது. அதன்பின் வாக்கு எண்ணிக்கையில் திருமதி இ.சரோஜா அவர்கள் 7 (ஏழு) வாக்குகளும் திருமதி இ.செல்வராணி அவர்கள் 17 (பதினேழு) வாக்குகளும் பெற்றனர். இதில் வார்டு எண்:18 நகர்மன்ற உறுப்பினர் திருமதி இ.செல்வராணி அவர்கள் 17 வாக்குகள் பெற்று துறையூர் நகர்மன்றதலைவருக்கான தேர்தலில் முறைப்படி தேர்ந் தெடுக் கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. |

ஒம்/- முன்னிலை:ஆர்.மனோகரன்
தேர்தல் நடத்தும் அலுவலர்,
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்(பொ),
துறையூர் நகராட்சி

## துறையூர் நகராட்சி

2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணியளவில் துறையூர் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நகர்மன்ற துணைத்தலைவர் பதவிக்காக மறைமுக தேர்தல் நடத்துதல் தொடர்பாக ,

முன்னிலை:ஆர்.மணோகரன்
தேர்தல் நடத்தும் அலுவலர்,
துறையூர்நகராட்சி

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 04.03.2022 | 01 | 2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணியளவில் துறையூர் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நகர்மன்ற துணைத்தலைவர் பதவிக்காக மறைமுக தேர்தல் நடத்துதல் தொடர்பாக | தீர்மான எண்:03<br>துறையூர் நகராட்சி துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் 04.03.2022 மாலை 2.30 மணியளவில் நகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் கூட்டம் கூட்டப்பட்டது. வருகை தந்த 24 வார்டு உறுப்பினர்கள் அனைவரிடமும் வருகைப் பதிவு விபரம் பெறப்பட்டது. நகர்மன்ற துணைத்தலைவர் தேர்தலில் போட்டியிட வார்டு எண்.9 நகர்மன்ற உறுப்பினர் திரு. த.இணையராஜா முன்மொழிந்து வார்டு எண்:11 நகர் மன்ற உறுப்பினர் திரு.ம.பாஸ்கரன் வழிமொழிந்து வார்டு எண்:10 நகர்மன்ற உறுப்பினர் திரு.ந.முரளி அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்தார். அதனைத் தொடர்ந்து வார்டு எண்:20 நகர்மன்ற உறுப்பினர் திரு.அ.பாலமுருகவேல் முன் மொழிந்தும், வார்டு எண்:23 நகர்மன்ற உறுப்பினர் திருமதி இ.சரோஜா வழிமொழிந்தும் வார்டு எண்:21 நகர்மன்ற உறுப்பினர் திரு.கா.தீனதயாளன் அவர்கள் வேட்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | மனு தாக்கல் செய்தார். மாலை 3.00 மணி வரை கால அவகாசம் அளிக்கப்பட்டது. வேறு யாரும் வேட்பு மனு அளிக்கவில்லை. வேட்பு மனுக்கள் சரிபார்க்கப்பட்டு, பெறப்பட்ட இரண்டு வேட்பு மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து 2006-ம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள்(தேர்தல்கள்) விதிகளில் கண்டுள்ள 102 விதியின்படி வாக்குச் சீட்டுகள் தயாரித்து வார்டு வாரியாக நகர் மன்ற உறுப்பினர்கள் வாக்குப்பெட்டி மூலம் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டு வாக்குப்பதிவு நடத்தப்பட்டது. அதன்பின் வாக்கு எண்ணிக்கையில் திரு.ந.முரளி அவர்கள் 18 (பதினெட்டு) வாக்குகளும், திரு.கா.தீனதயாளன் அவர்கள் 6 (ஆறு) வாக்குகளும் பெற்றனர். இதில் வார்டு எண்.10 நகர்மன்ற உறுப்பினர் திரு.ந.முரளி அவர்கள் 18 (பதினெட்டு) வாக்குகள் பெற்று நகர் மன்ற துணைத்தலைவருக்கான தேர்தலில் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. |

ஒம்/- முன்னிலை:ஆர்.மனோகரன்
தேர்தல் நடத்தும் அலுவலர்,
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்(பொ),
துறையூர் நகராட்சி

## துறையூர் நகராட்சி

2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30.03.2022 ஆம் நாள் புதன் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் கீழ் கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்படவேண்டிய சாதாணக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

முன்னிலை:இ.செல்வராணி,
நகர்மன்றதலைவர்

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 30.03.2022 | **01** | துறையூர் நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவற்றிற்கு 2021-2022-ம் நிதி ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைக்கும் 2022-2023-ம் நிதி ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதிக்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை (Budget) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.693/2022/பி1)<br>**அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்** | தீர்மான எண்:04 அனுமதிக்கப்பட்டுள்ளது |
| 30.03.2022 | **02** | துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் புகை மருந்து அடிப்பானுக்கு தேவைப்படும் கிருமி நாசினிகள் பைரித்யம்-100லிட்டர் மற்றும் அபேட்-50 லிட்டர் இருப்பு குறைவாக உள்ளதால் பொது சுகாதாரம் அவசியம் கருதி கிருமி நாசினிகள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் 3.00 இலட்சத்திற்கு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.428/19/எச்1)<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:05 அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 30.03.2022 | **03** | துறையூர் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.து.கேசவன் என்பவர் ஓய்வூதியம் வழங்க கோரி உயர்நீதிமன்றம், சென்னையில் தொடரப்பட்ட WP No **22572/2019** வழக்கின் தீர்ப்பாணை நகல் பெறப்பட்டுள்ளது. அன்னார் நீதிமன்ற தீர்ப்பின் படி ஓய்வூதியம் வழங்க கருத்துரு இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க கோரியதை தொடர்ந்து நீதிமன்ற தீர்ப்பாணை நகலில் தெரிவித்துள்ளவாறு அன்னாருக்கு | தீர்மான எண்:06 அனுமதிக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | | ஒய்வூதிய பலன்கள் வழங்க பரிந்துரை செய்திட தகுதியான நபரா என்பதற்கு உரிய சட்ட கருத்துரு வழங்க இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2244/சி1/2016 நாள் 08.11.2021–ல் கோரப்பட்டது. மேற்கண்ட தகவலுக்கு திருமதி.கே.புவனேஸ்வரி, கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் சட்டக்கருத்துரு வழங்கியுள்ளார். சட்டக்கருத்துரு வழங்கப்பட்டமைக்கு கட்டணமாக ரூ 5000/– வழங்க கோரி மனு செய்துள்ளார். எனவே அன்னாருக்கு ரூ 5000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் | |
| 30.03.2022 | **04** | மனைப்பிரிவு துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட (சாமிநாதன் நகர் அருகில் வார்டு எண்.8) துறையூர் கிராமம் வார்டு இ, பிளாக் 6, நகரளவு எண்.174/2,3,4 (பழைய சர்வே எண்.334/2 (பகுதி)-ல் 2.06 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திரு.ஆர்.சத்தியநாராயணன்(1), ஆர்.ஜெகநாதன் (2), ஆர்.சுதாகர் (3) ஆகியோர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி கோரி சமர்ப்பித்துள்ள உத்தேச மனு ஆய்வு செய்து சாலை அமைப்பு ஒப்புதல் வரைபடம் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரி வரப்பெற்றுள்ளது. மேற்படி வரைபடத்தில் கண்டுள்ள அளவுகள் படி தானப்பத்திர பதிவு எண்.1540/22ல் குறிப்பிட்டு நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேலும் மேற்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகளை தார்சாலையாக மனுதாரர் சொந்த செலவில் அமைத்துள்ளார். இதர அடிப்படை பணிகளான மழைநீர் வடிகால், சிறுபாலங்கள் ஆகியவற்றிற்கு பொறியியல் பிரிவின் வாயிலாக மதிப்பீடு ரூ.10.40 இலட்சத்திற்கு தயார் செய்து மேற்படி தொகையினை நகராட்சி கருவூலத்தில் 087/01/1/21-22/0016896 நாள்.01.03.2022ல் செலுத்தியுள்ளார் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.655/2019/எப்1) | தீர்மான எண்:07 அனுமதிக்கப்பட்டுள்ளது |
| 30.03.2022 | **05** | மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருச்சி மாவட்டத்திற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கவும் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் துவக்க விழாவிற்கு 30.12.2021 அன்று வருகை புரிந்து துவக்கி வைத்தார்கள். அவ்விழாவில் துறையூர் நகராட்சிக்கு தனி குடிநீர் திட்டம் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேற்படி திட்டத்தின் ஆய்வு பணிகள் மேற்கொள்ளவும், திட்ட மதிப்பீடு தயார் செய்திடவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய | தீர்மான எண்:08 அனுமதிக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்பொறியாளர் அவர்களின் கடிம் 2722/F-WSIS to Thuraiyur Municipality/Try/JDO1/2021 நாள்.27.01.2022 அவர்கள் Upfront Deposit ரூ.5.00 இலட்சம் செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி Upfront deposit தொகை ரூ.5.00 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.2195/2021/இ1)**<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| **30.03.2022** | **06** | துறையூர் நகராட்சி வார்டு எண்.11 பழைய போஸ்ட் ஆபிஸ் சந்தில் உள்ள பொது சிறுநீர் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்படி பொது சிறுநீர் கழிப்பிடத்தை மராமத்து செய்திட அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதனடிப்படையில் இடம் ஆய்வு செய்யப்பட்டு மேற்படி பொது சிறுநீர் கழிப்பிடம் மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க.எண்.981/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:09<br>அனுமதிக்கப்பட்டுள்ளது |
| **30.03.2022** | **07** | துறையூர் நகராட்சி வார்டு எண்.11 பழைய போஸ்ட் ஆபிஸ் சந்தில் உள்ள பொது சிறுநீர் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்படி பொது சிறுநீர் கழிப்பிடத்தை மராமத்து செய்திட அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதனடிப்படையில் இடம் ஆய்வு செய்யப்பட்டு மேற்படி பொது சிறுநீர் கழிப்பிடம் மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க.எண்.981/2022/இ1)**<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:10<br>அனுமதிக்கப்பட்டுள்ளது |

<table>
<tr>
<td>30.03.2022</td>
<td>08</td>
<td>துறையூர் நகராட்சியில் குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்பு கட்டணம் 2021-22ம் ஆண்டுக்கு கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்து புதிய குடிநீர் இணைப்பு பெறும் உரிமையாளர்களிடம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதன் விபரம்.
<table>
<tr><td>நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம்</td><td>கருங்கல் ஜல்லி சாலை ரூ. (Earthern Road)</td><td>தார்சாலை ரூ. (BT Road)</td><td>சிமெண்ட் சாலை ரூ. (CC Road)</td></tr>
<tr><td>0-30 மீட்டர் நீளத்திற்கு</td><td>2240</td><td>4720</td><td>5440</td></tr>
<tr><td>30-90 மீட்டர் நீளத்திற்கு</td><td>3460</td><td>5925</td><td>6640</td></tr>
</table>
<br>
எனவே அரசாணை (நிலை) எண்.34 நாள்.15.02.2010ன் படி 2022-23 ஆம் ஆண்டிற்கு குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்பு கட்டணத்தை தற்போதுள்ள கட்டணத்திலிருந்து 5% உயர்வு செய்து புதிய குடிநீர் இணைப்பு பெறும் உரிமையாளர்களிடம் வசூல் செய்திட கீழ்காணும் விபரப்படி சாலை சீரமைப்பு கட்டணம் நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம்</td><td>கருங்கல் ஜல்லி சாலைக்கு (Earthern Road) ரூ.</td><td>தார்சாலைக்கு (BT Road) ரூ.</td><td>சிமெண்ட் சாலைக்கு (CC Road) ரூ.</td></tr>
<tr><td>0-30 மீட்டர் நீளத்திற்கு</td><td>2355</td><td>4960</td><td>5715</td></tr>
<tr><td>30-90 மீட்டர் நீளத்திற்கு</td><td>3635</td><td>6225</td><td>6975</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1156/2018/இ2)</td>
<td>தீர்மான எண்:11<br>அனுமதிக்கப்பட்டுள்ளது</td>
</tr>
<tr>
<td>30.03.2022</td>
<td>09</td>
<td>துறையூர் நகராட்சியில் Gas Chlorination Plantஐ இயக்குவதற்கு இரண்டு பணியாளர்கள் ஒரு ஆண்டிற்கு சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 18.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்தப்புள்ளி விபரம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.21% குறைவு</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்:12<br>அனுமதிக்கப்பட்டுள்ளது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | <table><tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.43% அதிகம்</td></tr></table> மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.21% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.03.2022 | **10** | அரசாணை (D) **எண் 1159 (**Home (Courts.VIA) Department நாள் 12.10.2021-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள துறையூர் நீதி மன்றத்தில் அரசு சம்மந்தமான வழக்குகளில் ஆஜராக கீழ்க்கண்ட அலுவலர்களை பணிக்கால அடிப்படையில் 3 வருடத்திற்கு நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் திரு.எல்.சந்திரமோகன், வழக்கறிஞர் அவர்கள் தனது 26.01.2022ம் தேதிய கடிதத்தில் நகராட்சி தொடர்பான வழக்குகளை ஏற்று நடத்திட அனுமதி கோரியுள்ளார். ஆதலால் மேற்படி அரசாணை மற்றும் வழக்கறிஞர் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(அ.கு) மேற்படி வழக்கறிஞர் திரு.எல்.சந்திரமோகன் அவர்களை நகராட்சி தொடர்பான வழக்குகளை ஏற்று நடத்திட அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.327/2020/சி1 | தீர்மான எண்:13<br>அனுமதிக்கப்பட்டுள்ளது |
| 30.03.2022 | **11** | அரசாணை **(**நிலை**)** எண்**36** நாள் **19.04.2021** நநிமகு வழஙகுதுறை **(MEI)** ல் தேர்வு நிலை நகராட்சி செலுத்த வேண்டிய ஆண்டு பஙகுத் தொகை ரூ **1,25,000/–** என நிர்ணயம் செய்து ஆணை வழஙகப்பட்டுள்ளது**.** எனவே **2022–2023**ம் ஆண்டு பஙகுத் தொகை ரூ **1,25,000/–** தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்துார்–க்கு செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது**.**<br>ந.க.எண்**. 982 /**சி**1/2022**<br>**(**அ.கு**)** அனுமதிக்கலாம்**.** | தீர்மான எண்:14<br>அனுமதிக்கப்பட்டுள்ளது |
| 30.03.2022 | **12** | நகர்புற உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்நகராட்சியில் மூன்று உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.<br>ஒவ்வொரு அலுவலர்களும் பெறப்படும் வேட்பு மனு உறுதிமொழி ஆவணங்கள் நகல் எடுத்து பொதுமக்கள் பார்வைக்கு வெளியிட வேண்டி உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அவ்வப்போது வழங்கும் | தீர்மான எண்:15<br>அனுமதிக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவுரைகள் நகல் எடுத்து அலுவலர்களுக்கு வழங்கும் பொருட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய பிரிண்டர் மற்றும் ஸ்கேனர் ஒன்று அவசரம் அவசியம் கருதி உடனடியாக வாங்க வேண்டி உள்ளது. ஆதலால் 31.1.,2022க்குள் விலைப்புள்ளி வழங்க கோரி அறிவிப்பு செய்யப்பட்டது. இதில் கீழ்கண்ட நிறுவனங்கள் 31.01.2022 அன்று விலைப்புள்ளி வழங்கி உள்ளது.<br>1, Marvel Computer;s and Electronics, Salem - Rs.44,840/-<br>2. GEM - Rs.46,994/-<br>3. Digital India Solutions - Rs.49,560/--<br>4. RICOH Imagine Change - Rs.46,610/-<br>மேற்கண்ட விலைப்புள்ளிகள் GEM விலையை விட குறைவாகவும். இதர நிறுவனங்கள் வழங்கிய விலைப்புள்ளியை விட குறைவாகும். MARVEL Computer's & Electronice நிறுவனம் ரூ.44,840/-க்கு வழங்க முன்வந்துள்ளது. ஆதலால் மேற்படி நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய ஆணையர் / தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி கொள்முதல் செய்ததை மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேற்கண்ட விலைப்புள்ளிகள் GEM விலையை விட குறைவாகவும். இதர நிறுவனங்கள் வழங்கிய விலைப்புள்ளியை விட குறைவாகும்.<br>அகு: அ. மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்<br>ஆ. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் பிரிண்டர் வாங்க அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.03.2022 | **13** | **நகர்மன்றத் தலைவர் அவர்களால் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் கீழ்கண்டவாறு வைக்கப்பட்டுள்ளது.**<br>**திருமதி. R. லலிதா, 1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**<br>**வார்டுஎண்.1** கோவிந்தாபுரம் காலனி பகுதியில் புதியதாக நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து தண்ணீர் குழாய் வசதி மற்றும் தெருக்களில் மின்விளக்கு வசதி செய்து தருமாறும், வார்டு எண்.1 மேட்டுத்தெரு, வடக்கு ரதவீதி, தனலெட்சுமி நகர் ஆகிய மூன்று பகுதியில் புதிய நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து தண்ணீர் குழாய் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.<br>**திருமதி. K. நித்யா, 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**<br>**வார்டு எண்.2** தெப்பக்குளத்தில் பாசி படர்ந்து இருப்பதால் சுத்தம் செய்து தருமாறும், அதேபோல் வெளிபுறம் உள்ள பகுதியையும் சுத்தம் செய்து தருமாறும், வார்டு எண்.2 வடக்கு ரத வீதி, பூங்கா சாலை ஆகிய பகுதியிலி தெப்பக்குளம் அருகில் உள்ள டேங்கில் இருந்து பைப்லைன் சரிசெய்து இரண்டு வீதிகளுக்கும் உப்பு தண்ணீர் வழங்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டது. | தீர்மான எண்:16<br>அனுமதிக்கப்பள்ளது<br>நகராட்சி நிதி நிலை கருத்தில் கொண்டு பணிகள் மேற்கொள்ளலாம் |

**திருமதி. J. கார்த்திகேயன், 3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.3ல் உள்ள உப்பு தண்ணீர் விநியோகம் செய்யும் குழாய், பைப்புகள், கேட்வால்வுகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் சரிவர வருவதில்லை. ஆதலால் உடனடியாக சரிசெய்ய தொகை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அங்கன்வாடி மையத்தில் மின்சார இணைப்பு இல்லாது மிகவும் அவதியுறுகின்றனர். ஆதலால் அதற்கான மின்வசதி இணைப்பு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

வடக்குத்தெரு (பழைய 4-வது வார்டு) உப்புதண்ணீருக்கான வசதி எதுவும் இல்லை. தற்போதைக்கு காசிகுளம் தண்ணீர் வரத்து உள்ளது. வேறு எதுவும் உப்பு தண்ணீர் வசதி இல்லை. ஆகவே ஒரு ஆழ்துளை கிணறு மட்டும் அமைத்து தரமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திருமதி. கா.முத்துமாங்கனி, 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

**வார்டு எண்.4** பெரியஏரி சாலையில் உள்ள 30க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு உப்புதண்ணீர் இல்லாமல் அவதிபடுகின்றனர். அவர்களுக்கு உப்புதண்ணீர் குழாய் அமைத்து தருமாறும்,

கங்காரம்மன் கோவில் எதிர்புறம் உள்ள சந்தில் 10க்கும் மேற்பட்ட வீடுகள் உப்பு தண்ணீர் இல்லாமல் அவதிபடுகின்றனர். அவர்களுக்கு உப்புதண்ணீர் குழாய் அமைத்து தருமாறும்,

சாமிநாதன் தெரு, கீழவடக்குத்தெரு மற்றும் கங்காரம்மன் கோவில் தெரு ஆகிய மூன்று தெருக்களும் சந்திக்கும் இடத்தில் உள்ள பாலத்தில் சாக்கடை கழிவுநீர் செல்ல முடியாமல் பாலம் பழுதடைந்துள்ளது. அதனால் பொதுமக்களுக்கு தொற்றுநோய் பரவு நிலை உள்ளதால், அந்த இடத்திற்கு புதிய பாலம் வசதி அமைத்து சாக்கடை கழிவுநீர் சீராக செல்ல வசதி செய்து தாருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திருமதி. செ.பெரியக்கா, 5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.5 சந்தை ரோடு மாரியம்மன் கோவிலை சுற்றியுள்ள பகுதியில் உப்பு தண்ணீர் பைப் இல்லை.இப்பகுதியில் தண்ணீர் தொட்டி அமைத்து பைப்லைன் பதித்து தண்ணீர் குழாய் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. வார்டு எண்.5-ல் 20 குடும்பங்களுக்கு ஒரு உப்பு தண்ணீர் குழாய் மட்டுமே உள்ளது. பைப்புகள் அமைத்து தண்ணீர் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. வார்டு எண்.5ல் பொதுசுகாதார கழிப்பிட வசதி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.வார்டு எண்.5 அரசு மகளிர் மேல்நிலை பள்ளி உள்ளது. அப்பகுதியில் சாலைகள் பழுதடைந்துள்ளதை புதுப்பித்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. வார்டு எண்.5ல் அமைந்துள்ள அரசு மகளிர் மேல்நிலை பள்ளிக்கு அருகிலும், சந்தை ரோடு மற்றும் வேங்கடத்தானூர் சாலை இணையும் இடத்திலும் மற்றும் புதிதாக அமையவுள்ள ரேஷன் அங்காடி அருகில் அரங்க விளக்கு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. வார்டு எண்.5ல் பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் டேங்க்கினை சீரமைத்து சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திருமதி. D.ஹேமா, 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.6-க்குட்பட்ட பழைய மூன்று போர்களை பழுது பார்த்து சரிசெய்து கொடுக்குமாறும், வேங்கடத்தானூர் சாலையில் உள்ள EB சர்வீஸ்-யை கீரம்பூர் லையனில் இருந்து மாற்றி தருமாறும், எங்கள் பகுதியில் ஒரு பூங்கா அமைத்து தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | **திருமதி. K.கௌதமி, 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**<br>முத்துநகர்-1, முத்துநகர்-2 ஆகிய பகுதியில் 18 தெருவிளக்கு அமைத்து தருமாறும், பெரியார் நகரில் 14 தெருவிளக்கு அமைத்து தருமாறும், பிச்சாயி கோவில் அருகில் 5 தெருவிளக்கு அமைத்து தருமாறும் மற்றும் முத்துநகரின் வடபுறம் உள்ள கழிவுநீர் வாய்க்காலை கான்கிரீட் கழிவுநீர் வாய்க்காலாக அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.<br>**திரு. M.சுதாகர், 8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**<br>வார்டு எண்.8 சாமிநாதன் நகரில் உள்ள தண்ணீர் டேங்க் கட்டி 5 ஆண்டுகள் ஆகியுள்ளதால், போர்வெல் அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்து தருமாறும், வார்டு எண்.8ல் போர்வெல் மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதை சரிசெய்து சீரமைத்து தருமாறும்,வார்டு எண்.8 சாமிநாதன் நகரில் விடுபட்ட இடங்களில் மின்கம்பி இழுத்து சுமார் 50 தெருவிளக்குகள் அமைத்து தருமாறும், வார்டு எண்.8 கட்டபொம்மன் தெருவில் ஏற்கனவே வார்டு எண்.9லிருந்து தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இதனை மாற்றி கட்டபொம்மன் தெருவில் உள்ள போர்வெல்லில் தண்ணீர் உள்ளதால் இணைப்பினை மாற்றி பைப்லைன் அமைத்து சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் 15 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலைகள் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் கான்கிரீட் தளம் அமைத்து தருமாறும், வார்டு எண்.8 கீழக்கடை வீதி சிவலிங்கம் சந்து சிறிய பாலம் அமைத்தல் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்து தருமாறும், வார்டு எண்.8 பெரம்பலூர் ரோட்டில் உள்ள முத்தையா காலனியிலிருந்து GH வரை உள்ள வடிகால் கட்டி 15 ஆண்டுகளுக்கு மேலாகியுள்ளதால் புதியதாக சாக்கடை கட்டி தருமாறும்,வார்டு எண்.8 சாமிநாதன் நகரில் சுமார் 2.50 கி.மீ சுற்றளவில் புதியதாக சாக்கடை அமைத்து தருமாறும், வார்டு எண்.8 கீழக்கடை வீதி குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் கோனார் சந்து அருகில் குழாய் அமைத்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட்டது.<br>**திரு. த.இளையராஜா, 9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**<br>புதுக்காட்டு தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின்மோட்டார் பொருத்தி Sintex டேங்க் அமைத்து புதிதாக குழாய் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வருதல். செக்கடி தெருவில் உள்ள ஊறுகாய் கம்பெனிக்கு அடுத்த சந்தில் உள்ள மின்கம்பத்தில் உள்ள தெருவிளக்கு இணைப்பு கொடுப்பதற்கு மின்சார லயன் இல்லாமல் உள்ளது. அதற்கு லயன் இழுத்து மின்விளக்கு பொருத்துதல். கணபதி சந்தில் உள்ள கழிவுநீர் வடிகால் கால்வாய் மிகவும் சிறியதாக உள்ளது. அதையும் பெரிய வடிகால் கால்வாய் அமைத்து தர கோருதல்.உயர்நிலைப்பள்ளி சாலை சாவடி எதிரில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கும் ஞானம் அறுப்பு மில் வீட்டிற்கும் இடையில் மிகவும் இருட்டாக உள்ளது. அந்த இடத்தில் மின்விளக்கு அமைத்து தர வேண்டி.உயர்நிலைப்பள்ளி சாலையில் இருந்து செக்கடி செல்லும் ரோட்டிற்கு இடையில் உள்ள பாலம் சிறியதாக உள்ளது. அடிக்கடி கால்வாய் அடைப்பு ஏற்படுகிறது. அதற்கு பெரிய பாலம் அமைத்து தர வேண்டுதல்.<br>செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி சாலை செக்கடி தெரு சாலையின் மேல் உள்ள பெண்கள் கழிப்பிடத்திற்கு போதிய தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அதற்கு எதிரில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின்மோட்டார் மற்றும் EB சர்வீஸ் இல்லை. அதனை சரிசெய்து கொடுக்க கோருதல். | |

**திரு. M. பாஸ்கரன், 11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.11 பழைய போஸ்ட் ஆபிஸ் சந்தில் காசிவிஸ்வநாதர் குளத்தில் இருந்து புதிய குழாய் அமைத்து 10000 கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து வெங்கடாஜலம் சந்து, தபேதார் சந்து மற்றும் பழைய போஸ்ட் ஆபிஸ் சந்து ஆகிய மூன்று தெருக்களின் பயன்பாட்டிற்கு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

பெரிய கடைவீதியில் உள்ள ஆக்ஸிஸ் வங்கி எதிரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கடந்த பத்து ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு இல்லாமல் பழுதாகி உள்ளது. ஆதலால் பழுதினை சரிசெய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திருமதி. ந. திவ்யா, 12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.12 அங்காளம்மன் சந்து, காமாட்சி அம்மன் சந்து, மாதவராவ் சந்து, சௌண்டீஸ்வரி அம்மன் கோவில் சந்து ஆகிய இடங்களில் ஏற்கனவே போர் இருந்து பழுதாகி உள்ளது. அதை சரிசெய்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தர கோருதல்.

சௌண்டீஸ்வரி அம்மன் கோவில் தெருவில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் பொது கழிவறையில் மின்விளக்கு அமைத்து தர கோருதல்.

போர் தண்ணீர் இல்லாத காரணத்தினால் வார்டு எண்.12ல் மூன்று நாட்களுக்கு ஒருமுறை காவிரி குடிநீர் மற்றும் 1 மணிநேரம் அதிகப்படுத்தி வழங்க கோருதல்.

**திரு. ம. பாபு, 13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.13ல் தினப்பயன்பாட்டிற்குரிய தண்ணீர் மற்றும் குடிநீர் பிரச்சனை இருந்து வருவதால் அப்பகுதி மக்களுக்கு போதிய அளவு கிடைத்திட இரண்டு போர்வெல் அமைத்து மின்மோட்டார் பொருத்தி, பைப் பராமரிப்பு வேலை செய்து அதிலிருந்து நீர்த்தேக்க தொட்டி அமைத்து அனைத்து வீடுகளுக்கும் போதுமான அளவில் உப்புத் தண்ணீரை விநியோகம் செய்வதற்கு தகுந்த நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

13-வது வார்டில் உள்ள சத்துணவுக் கூடம் அருகாமையில் உள்ள பொது கழிப்பறை செப்டிக் டேங்க் தொட்டி இடிந்து விழும் நிலையில் உள்ளது. அதனை சரிசெய்து பராமரிப்பு பணி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும், மேலும் கீழக்குத்தி தெருவில் உள்ள 200 அடி அகலம் கொண்ட சிமெண்ட் சாலை மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் சிமெண்ட் சாலையை அப்புறப்படுத்தி அதற்கு பதிலாக புதிய தார்சாலை அல்லது பேவர்பிளாக் சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திருமதி. S. செந்தில்குமார், 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.14 தியாகி சிங்கார வேலர் தெருவில் Aircel Tower பகுதியில் புதிய வீடுகள் நிறைய கட்டப்பட்டு வருகின்றன. அந்த தெருவிற்கு K.N.நேரு நகர் என்று பெயரமைத்து அந்த நகருக்கு தெருமின்விளக்கு, வடிகால், சிமெண்ட் ரோடு, தார்சாலை அமைத்து தர கோருதல்.

தியாசி சிங்கார வேலர் தெருவில் உப்பு தண்ணீர் இல்லாமல் உள்ளது. உப்பு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்து தர கோருதல்.தியாகி சிங்கார வேலர் தெருவில் கோழிப்பண்ணை சந்தில் சிமெண்ட் ரோடு மற்றும் வடிகால் அமைத்து தர கோருதல்.நிறைய இடங்களில் லைட் வெளிச்சம் இல்லாமல் உள்ளது. அந்த இடத்தில் புதிய மின்விளக்கு அமைத்து தர கோருதல்.

**திருமதி. S. புவனேஸ்வரி, 15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

15-வது வார்டுக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் குடிநீர் அல்லாத தண்ணீர் பயன்பாட்டிற்கு தேவையான பகிர்மான குழாய் வசதி வீதிதோறும் அமைத்து அதற்கு தேவையான 5000 லிட்டர் நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல் மற்றும் காவிரி குடிநீர் வரும் நேரத்தை அதிகரித்து மக்களின் தேவையை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

தெற்கு மாரியம்மன் கோவில் முன்புறம் உள்ள சாக்கடையை அகலப்படுத்தி தண்ணீர் தேங்காதவாறும் மேலும் தெற்கு தெரு, சிவலிங்கம் தெரு, பண்டரிநாதன் தெரு மற்றும் சௌடாம்பிகா தெருவில் சாக்கடை வசதி அமைத்து தர கோருதல்.

**திருமதி. N. சந்திரா, 16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

சிக்கம்பிள்ளையார் கோவில் தெரு, பட்டணம் சந்து, காந்தி ரோடு, ஸ்வீப்பர் காலனி, புதுத்தெரு அனைத்திலும் தண்ணீர் பிரச்சனை இருக்கிறது. புதுத்தெரு-1யை சுற்றி உள்ள தெருக்களில் ஒருதுளி கூட உப்பு தண்ணீர் இல்லை. ஆதலால் தண்ணீர் வசதி செய்து தர கோருதல்.புதுத்தெருவில் இருட்டாக உள்ள பகுதியில் ஒரு மின்கம்பம் இழுத்து தெருவிளக்கு அமைத்து தர கோருதல் மற்றும் சாக்கடை சிறியதாக உள்ளதை சரிசெய்து கொடுக்க கோருதல், சக்தி மாரியம்மன் கோவில் எதிரில் தெருவிளக்கு அமைத்தல், ஸ்வீப்பர் காலனி வீடுகள் சேதம் அடைந்துள்ளதை சரிசெய்து கொடுக்க கோருதல், சிக்கம்பிள்ளையார் கோவில் பக்கத்தில் உள்ள சந்தில் கான்கிரீட் தளம் அமைத்து தர கோருதல். சுபலட்சுமி மண்டபம் பக்கத்தில் ஒரு கம்பம் உள்ளது. அதில் தெருமின்விளக்கு அமைத்து தர கோருதல். சிக்கம்பிள்ளையார் கோவில் தெருவில் போர்வெல் அமைத்து மின்மோட்டார் அமைத்து தர கோருதல்.பட்டணம் சந்து ஐயப்பன் ரைஸ்மில் பக்கத்தில் கிணறு உள்ளது. பிள்ளையார் கோவில் பக்கம் டேங்க் வைத்து பக்கத்தில் உள்ள தெருக்களுக்கு தண்ணீர் சப்ளை செய்து தர கோருதல். ஆதிதிராவிடர் பள்ளி பக்கத்தில் உள்ள தொட்டியிலிருந்து தண்ணீர் சப்ளை வந்தது. சாலை அமைக்கும் போது மூடிவிட்டார்கள் அதை சரிசெய்து தர கோருதல்.காவிரி தண்ணீர் நான்கு நாட்களுக்கு ஒருமுறை விநியோகம் செய்ய வேண்டும். தெரு குழாயானது மேலே போட்டு தர கோருதல்.

ஐயப்பன் ரைஸ்மில் அருகில் உள்ள குடிநீர் குழாய் மூடி உள்ளது. அதை சரிசெய்து தர கோருதல்.ரேடியோ Room அருகில் உள்ள குடிநீர் குழாய் மூடி உள்ளது. அதை சரிசெய்து தர கோருதல்.ஆங்காங்கே பைப்லைன் உடைந்துள்ளதை சரிசெய்தல். சிக்கம்பிள்ளையார் கோவில் தெருவில் தண்ணீர் டேங்க் அமைக்க இடம் உள்ளதால் அப்பகுதியில் அமைத்து தர கோருதல்.

**திருமதி. M.சுமதி, 17-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

17-வது வார்டில் அங்கன்வாடி அமைந்துள்ள வீதியில் முன்னாள் கவுன்சிலர் ராமு வீடு வரை புதிதாக பைப்லைன் அமைத்தல் மற்றும் கான்கிரீட் தளம் அமைத்து தர கோருதல்.

**திரு. த. ஜானகிராமன், 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.19 ஓம்சக்தி கோவில் அருகில் ஆழ்துளை கிணறு, 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்க் உள்ளது. கிணற்றை சுத்தம் செய்து டேங்கில் நீரேற்றம் செய்து வார்டு முழுவதும் புதிதாக பைப்லைன் அமைத்து வார்டு முழுவதும் அனைத்து பகுதிகளுக்கும் கோடைகாலத்தை சமாளிக்கும் பொருட்டு நீர் விநியோகம் செய்ய சரி செய்ய கோருதல்.

எனது வார்டில் சாக்கடை கட்டி 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஆகவே புதிதாக

| | | | |
|---|---|---|---|
| | | சாக்கடை வசதி அமைத்து தர கோருதல்.<br>எங்களது வார்டில் 20க்கும் மேற்பட்ட 6அடி சந்து உள்ளது. அதற்கு சிமெண்ட் தளம் அமைத்து தர கோருதல்.<br>**திரு. அ. பாலமுருகவேல், 20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**<br>நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர், தெருவிளக்கு, மழைநீர் வடிகால் மற்றும் நகராட்சி நிதி ஆதாரத்தை பெருக்கும் வகையிலான வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை கோருதல்.நகராட்சி எல்லைக்குட்பட்ட நிலங்கள் மற்றும் வீட்டு மனைகளை அளவீடு செய்யும் உட்பிரிவு செய்து பட்டா சான்று வழங்கும் பணியை வருவாய் துணை ஆளுகையின் கீழ் உள்ள நில அளவை பிரிவு (சர்வே டிப்பார்ட்மெண்ட்) மேற்கொண்டு வருவதால், அதன் வருவாய், வருவாய் துறைக்கு செல்வதோடு மக்களும் அலைக்கழிக்கப்பட்டு பெரும் சிரமத்துக்கு ஆளாக்கப்படுகின்றன. எனவே ஏற்கனவே துறையூர் நகராட்சி நிர்வாகத்தின் கீழ் இருந்து நில அளவையர் பணியை மீண்டும் துறையூர் நகராட்சி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர ஆவண செய்ய நடவடிக்கை கோருதல். 20-வது வார்டு கூட்டுறவு நகர் பூங்காவை தமிழக அரசின் நகர்புற பசுமை பூங்கா திட்டத்தின் கீழ் சீர்படுத்தி பொழுதுபோக்கு அம்சங்களுடன், குழந்தைகள், பெரியவர்கள் பயன்பெறும் வகையில் செப்பணிடவும், மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் சேதமடைந்த இடத்தில் புதிய மழைநீர் வடிகாலை BR டாக்டர் வீட்டின் கீழ்புறத்திலிருந்து துவங்கி கருமாரி அம்மன் கோவில் வழியாக வாரி வரை அமைத்து தர கோருதல்.காமராஜ்நகர் ஆஜ்சநேயா நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மழைநீர் வடிகால் அமைக்கவும், தெருவிளக்கு மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத இடங்களில் மேற்படி வசதியை செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.காமராஜ்நகர் வடக்கு பகுதியில் மாராடி மல்லிகா வீடு முதல் DCTC வாசு வீடு வழியாக வாரி வதை உள்ள பழுதடைந்த வடிகாலை புதுப்பித்து தரவும், டைலர் சேகர் வீடு முதல் DCTC வாசு வடிவேல் வீடு வரை சிமெண்ட் தளம் அமைக்கவும் ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.காமராஜ்நகர் மெயின் விதியில் குடிநீர் பயன்பாடு அல்லாத தண்ணீர் வழங்க, ஆழ்குழாய் அமைத்து மேல்நிலை தொட்டி மூலம் நீர் ஏற்றி பகிர்மான குழாய் பதித்து காமராஜ் நகர் முதல் அகத்தியர் தெருவரை விநியோகம் செய்ய நடவடிக்கை கோருதல். மேலும், TB ராமசாமி வீட்டு சந்தில் சிமெண்ட் சாலையும், மழைநீர் வடிகாலும் அமைப்பதோடு, அகத்தியர் தெருவில் விடுபட்ட இரண்டு தெருக்களுக்கு தார்சாலையும், மழைநீர் வடிகாலை வாரிவரை அமைக்கவும், மேற்படி தெருக்களில் தெருவிளக்கு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.காமராஜ் நகர் மெயின் விதியில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மேட்டு பகுதியில் உள்ள வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் பற்றாக்குறையை போக்கவும், அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கிய காரணத்தாலும், ஏற்கனவே இருந்த பொது குடிநீர் குழாய் இணைப்பை அகற்ற கோரிய கோரிக்கையை ஏற்று, பொது குழாயை மூடியதற்கு மன்ற ஒப்புதல் பெற்று தர கோருதல்.<br>**திரு. கா. தீனதயாளன், 21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**<br>வார்டு எண்.21 LD பேங்க் அருகாமையில் உள்ள போர்வெல்லை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தர கோருதல்.<br>21-வது வார்டுக்குட்பட்ட பகுதியில் மக்கள் அதிகமாக இருப்பதால் உப்பு தண்ணீர் தேவை | |

ஏற்படுகிறது. ஆதலால் புதிய போர்வெல் அமைத்து தர கோருதல்.

அங்கன்வாடி மையமானது கடந்த இரண்டு வருட காலமாக மேற்கூரை உடைந்துவிழும் நிலையில் உள்ளதால் புதிய அங்கன்வாடி மையம் அமைத்து தர கோருதல்.

சங்கீத் நகர், சக்தி நர்சிங் ஹோம் மேற்கு, குட்டக்கரை மேடு நான்காவது பாலம், 5-வது பாலம் போன்ற பகுதியில் புதிய மின்விளக்குகள் அமைத்து தர (மொத்தம் 25 பல்புகள்) கோருதல்

40 குடிசை பகுதியில் அமைந்துள்ள 5 பாலங்களுக்கும், தனியாக புதிய பெயர் வைத்து அப்பகுதி மக்களின் அட்ரஸ் பிரச்சனையை தீர்க்க வேண்டும்.

40 குடிசை பகுதியில் உப்புதண்ணீர் சரிவர கிடைக்கப்பதில்லை. அதில் நான்கு பாலத்திலும் பைப்லைன் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்து தர கோருதல்.

40 குடிசை பகுதியில் (5-வது பாலம்) துரை செட்டியார் வீட்டிற்கு கிழக்கு பகுதியில் பாலம் இல்லாததால் அதில் பாலம் அமைத்து தர கோருதல்.

துறையூரில் அனைத்து வாரிடுகளிலும் அமைத்து கொடுத்தது போல் 21-வது வார்டிலும் குடிநீர் குழாய்களை மேலே உயர்த்தி போட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இடிந்த நிலையில் உள்ள பாலங்களை சீரமைத்து தர கோருதல்.

பாலக்காட்டு மாரியம்மன் கோவில் தெரு நுழைவு வாயில் அமைந்துள்ள பாலத்தை மாற்றி புதிய பாலம் அமைத்து தர கோருதல்.

**திரு. S. வீரமணிகண்டன், 22-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.22ல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து காவிரி குடிநீர் பைப்லைன் 4” பைப் லைனாக உள்ளது. அதை 6” பைப் லைனாக மாற்றி குடிநீர் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.வார்டு எண்.22ல் காவிரி குடிநீர் குழாயை மேலே தூக்கி போட்டு அனைவருக்கும் சம அளவு குடிநீர் கிடைக்க வகை செய்ய வேண்டும்.விஸ்தரிப்பு பகுதியில் (West Extn Area) தெருவிளக்கு அமைத்து தர வேண்டும். அவசரகால அடிப்படையில் செய்து தர வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.வார்டு எண்.22 லெட்சுமிகாந்தபுரம் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க்கிலிருந்து பைப் லைன் போட வேண்டும்.லெட்சுமிகாந்தபுரம் கிழக்குப்பதியில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்க வேண்டும்.

**திரு. இ. சரோஜா, 23-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

மாருதி நகர் பகுதி மக்களின் கோரிக்கை.23-வது வார்டு முழுவதும் பின்தங்கிய வார்டாகவும், விரிவான பகுதியாகவும் உள்ளதால் Slum ஏரியாவாக அறிவிக்க வேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டது.

திருச்சி ரோட்டில் மாருதி நகர் நுழைவு வாயிலில் கரட்டு மலை அருகில் உள்ள பகுதியில் இரவு நேரத்தில் விஷ ஜந்துக்கள் நடமாட்டமும், திருட்டு பயமும் உள்ளதால் பெண்கள், குழந்தைகள், நடமாட முடியாத சூழ்நிலை உள்ளது. அங்குள்ள முட்புதர்களை அகற்றி தெருவிளக்கு அமைத்து தர கோருதல்.மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து தினமும் சீராக தண்ணீர் கிடைக்க ஆவண செய்ய வேண்டுகிறேன்.

ஜெமீந்தார் மேல்நிலைப்பள்ளி பின்புறமுள்ள குடிசை பகுதியில் மழைநீர் தேங்காமல் சாலைவசதி அமைத்து மற்றும் காவேரி குடிநீர் வழங்கவும், அந்த இடத்தில் ரோட்டின் குறுக்கே உள்ள மின் கம்பத்தை அகற்றி பாதுகாப்பாக வேறு இடத்திற்கு மாற்றி அமைத்தல், நீண்ட கோரிக்கையான பட்டா பெற ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.சர்ச் (கிருஸ்துவ

தேவாலயம்)-க்கு வடபுறம் உள்ள பகுதிக்கு காவேரி குடிநீர் மற்றும் சாதாரண நீர் கிடைக்க கேட்வால் அமைத்து தர கோருதல்.மேற்கண்ட பகுதியில் உள்ள அனைத்து குறுக்கு சாலைகளிலும் கழிவுநீர் வடிகால் சீரமைத்து மறு சீரமைப்பு செய்தும் கழிவுநீர் வடிகால் வசதி இல்லாத பகுதிக்கு புதியதாக கழிவுநீர் வடிகால் வசதி அமைத்து சாலையை புதுப்பித்து தர கோருதல்.நெசவாளர் காலனி பகுதி மக்களின் கோரிக்கை மேற்படி பகுதியில் உள்ள விநாயகர் கோவிலின் சுற்று பகுதியில் உள்ள செடிகொடி மற்றும் முட்புதர்களை அகற்றி தூய்மைப்படுத்த கோருதல்.அனைத்து வீதிகளுக்கும் போதிய குடிநீர் வசதி மற்றும் சாதாரண நீர் மற்றும் கழிவு நீர் வடிகால் வாய்க்கால் வசதி செய்து தர கோருதல். விளையாட்டு கூடத்தை சீரமைப்பு செய்து மாலை நேரத்தில் முதியோர்கள் மற்றும் குழந்தைகள் நடைபயிற்சி செய்யவும், விளையாடவும், முதியோர்கள் ஓய்வெடுக்க திண்ணை வசதி ஏற்படுத்தி கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அப்பகுதியில் சுற்றுப்பகுதியில் உள்ள முட்புதர்களை அகற்றி மின்விளக்கு இல்லாத பகுதிகளுக்கு மின்விளக்கு அமைத்து தர கோருதல்.மலையப்பன் சாலை-1 பகுதி மக்களின் கோரிக்கைஅரசு மகளிர் விடுதி பின்புறம் உள்ள குடியிருப்பு பகுதியில் உள்ள மக்கள் இயற்கை உபாதை (மலம், ஜலம்) கழிக்க முடியாமல் திறந்தவெளியில் பயன்படுத்தி வருவதால் அங்குள்ள ஏற்கனவே உள்ள பழைய கழிப்பிடத்தை புதுப்பித்து மக்கள் பயன்பாட்டிற்கு கட்டமைப்பு செய்து தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.கழிவு நீர் வடிகால் சீரமைத்து தர கோருதல்.அப்பகுதி மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளதால் புதிய வீடுகட்டி கொடுக்க வேண்டியும், அவர்களுக்கு சிறு சுயதொழில் செய்ய வங்கி கடன் பெற்று தர ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மலையப்பன் சாலை-2, 1 முதல் 14 குறுக்குசாலை வரை உள்ள பகுதி மக்களின் கோரிக்கை

இப்பகுதியில் உள்ள அனைத்து குறுக்கு சாலை பகுதிகளிலும் கழிவுநீர் வாய்க்கால் ஏற்படுத்தியும், அனைத்து வீதிகளுக்கும் தெருமின்விளக்கு வசதி ஏற்படுத்தியும், அனைத்து வீதிகளுக்கும் தெருமின்விளக்கு வசதி ஏற்படுத்தியும், முட்புதர்களை அகற்றி சுத்தம் செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. உபயோகமில்லாமல் கிடப்பில் போடப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை சீரமைத்து அப்பகுதி மக்களுக்கு தங்குதடையின்றி சாதாரண சாதாரண தண்ணீர் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. காமராஜர் காலனியில் உள்ள விநாயகர் கோவிலை சுத்தப்படுத்தி அங்குள்ள வசதியற்ற தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் அதிகமுள்ளதால் அவர்கள் இல்லங்களில் நடைபெறும் விஷேச வைபோகங்களுக்கு சமுதாய கூடம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளள்ப்பட்டது. (அதற்குரிய போதிய இடவசதி அப்பகுதியில் உள்ளது)

காமராஜர் காலனியில் உள்ள விநாயகர் கோவிலின் தென்புறம் உள்ள காலியிடத்தில் காமராஜர் பெயரில் நூலகம் அமைத்து பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையிலும், அதனை ஒட்டி உள்ள பகுதியில் உடற்பயிற்சி கூடம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.காலனி நுழைவாயிலில் உள்ள பாலத்தை உயர்த்தி கழிவுநீர் தேங்காமல் புதுப்பித்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திருமதி. N. கல்பனா, 24-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் பொருள்**

வார்டு எண்.24 நாகம்மா கோவில் பகுதியில் அமைந்துள்ள நீர்த்தேக்க தொட்டியின் மோட்டார் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் குடிநீர் அல்லாத தண்ணீர் பயன்பாட்டிற்கு இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். ஆதலால்

| | | | |
|---|---|---|---|
| | | உடனடியாக மின் இணைப்பை சீர்செய்து நீர்த்தேக்க தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு.24-வது வார்டில் அமைந்துள்ள அம்மாபட்டி சாலையில் பழனிநகர் பகுதியில் உள்ள நீர்த்தேக்க தொட்டி மற்றும் கண்ணபிரான் காலனியில் உள்ள நீர்த்தேக்க தொட்டியின் மின்மோட்டார் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. அதனை சரிசெய்து குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட்டது.<br>24-வது வார்டில் அமைந்துள்ள பாலாஜி அவென்யூ, பொதிகை நகர் பகுதிகளுக்கு காவிரி குடிநீர் இணைப்பு மற்றும் குடிநீர் அல்லாத தண்ணீர் இணைப்பு எதுவுமே வழங்கப்படவில்லை. இதனால் தண்ணீர் இன்றி மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். ஆதலால் தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து காவிரி குடிநீர் மற்றும் குடிநீர் அல்லாத தண்ணீர் கிடைக்க ஆவண செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.24-வது வார்டு மக்களின் நீண்ட கோரிக்கையான வார்டின் அனைத்து பகுதிகளிலும் சாக்கடை வசதி அமைத்து தர கோருதல்.வார்டில் உள்ள அனைத்து தெருக்களிலும் பழுதடைந்த மற்றும் மீதம் போடப்படாமல் உள்ள தெருவிளக்குகளை அமைத்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. | |

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்

/உண்மை நகல் /

ஆணையர்(பொ),
துறையூர் நகராட்சி